## சேருவில பிரதேச சபை
## திருகோணமலை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 மார்ச் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீஏ/இபொதுகநி ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் கடன்பதிவேட்டின் படி 2013 திசெம்பர் 31 ஆந்திகியில் உள்ளவாறு ரூபா 1,748,149 தொகையான ஊழியர் கடன் மீதி ரூபா 1,655,044 ஆக

நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டமையால் ஊழியர் கடன் ரூபா 93,105 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடை வாடகைப் பதிவேட்டின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 382,921 தொகையான கிடைக்க வேண்டிய கடை வாடகை மீதி ரூபா 246,645 ஆக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டமையால் பெறவேண்டிய கடைவாடகை ரூபா 136,276 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 246,646 கூட்டுத்தொகையான பெறவேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் அந்த விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| ஆண்டின் போது சேர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் | 71,517,158 | விரிவான பட்டோலை, நிலையான சொத்துப்பதிவேடு மற்றும் உரித்துறுதி |
| செலுத்தவேண்டிய கணக்குகள் | 9,341,439 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை, விரிவான பட்டோலை. |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) உள்ளுராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்க்பபட்டிருக்கவில்லை |
| (இ) மாகாண நிதிவிதி இல - 236 | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 19,176 பெறுமதியான 19 காசோலைகள் தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 570 | மீளச்செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு ரூபா 117,966 தொகையான மீதியொன்று இரண்டு வருடங்களுக்கு |

மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,081,004 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,553,654 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண பெறுவனவு ரூபா 12,242,329 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 8,527,350 இனால் அதிகரிப்பதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 30 | 13 | - |
| வாடகை | 2,205 | 1,898 | 247 |

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 269 | 421 | - |
| ஏனைய வருமானம் | 15,796 | 12,824 | - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 3.1.1 ஆயுர்வேத வைத்திய நிலையத்தை நடாத்திச் செல்லல்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் புள்ளி விபரங்களின் படி 2013 ஆம் ஆண்டில் 1,711 நோயாளர்களுக்காகவும் 2014 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் 1,186 நோயாளர்களுக்காகவும் மருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. ஆயுர்வேத வைத்தியரொருவர் இல்லாமையின் காரணமாக ஆயுர்வேத வைத்திய நிலையம் 2014 யூன் மாதம் முதல் மூடப்பட்டிருந்தமையின் காரணமாக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 14,741 எண்ணிக்கையிலான பொது மக்களுக்கு சேவையினை வழங்கி அவர்களின் சுகாதார நிலையினை மேம்படுத்தும் பிரதேச சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஆயுர்வேத வைத்திய நிலையம் மூடப்பட்டமையின் காரணமாக ரூபா 112,260 தொகையான ஆயுர்வேத மருந்து இருப்புக்கள் மற்றும் ஆயுர்வேத நிலையத்தின் மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) பொருட் பதிவேட்டைப் பேணிச் செல்லல்

கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் பொருட்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு குறித்த மாதிரிப் படிவத்தில் பேணப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வுச் சபை அங்கத்தவர்களினால் பொருட்பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை மாதிரிப்படிவம் (PS From) தயாரித்தல்

---

2013 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நிலுவை வருமானம், நாளாந்த வருமானத்தின் வகைப்படுத்தல், மாதாந்த ஒன்றிணைந்த பெறுவனவுப் பொழிப்பு, மாதாந்த ஒன்றிணைந்த பெறுவனவுப் பகுப்பாய்வு, மாதாந்த ஒன்றிணைந்த செலவினப் பொழிப்பு, மாதாந்த ஒன்றிணைந்த செலவினப் பகுப்பாய்வு போன்றவைகளுக்கு பிரதேச சபை மாதிரிப்படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்துதல்

---

2014 சனவரி 28 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் படி 23 பொருள் வகைகளை பழுதுபார்ப்பதற்கும், 11 பொருள் வகைகளை அகற்றுவதற்கும், 14 பொருள் வகைகளை அழிப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) அலுவலக உபகரணங்களின் கொள்வனவு

---

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் தகுதியான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாது 2014 ஆம் ஆண்டின் போது புறநெகும நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 2,401,300 தொகையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---

**பிரதேச சபை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்தல்**

---

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அலுவலகத்திற்காக இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 27,709,341 (வற் தவிர்த்து) பெறுமதியில் 06 மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2012 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்தக் கட்டிடம் 2014 மார்ச் மாதம் 12 ஆந் திகதி உத்தியோகபூர்வமாக பொதுமக்களின் உரித்தாக கையளிக்கப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்த பொறியியலாளர் சான்றிதழ் பெற்று சபையினால் கையேற்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 09 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத்தின் கூரையிலிருந்து கூட்ட மண்டபத்தில் உள்ள பைபர் (Fiber) சிவ்லீனுக்கு அடுத்தாவுள்ள பலகையினால் மேவுகை செய்யப்பட்ட சிவ்லிமிற்கு தண்ணீர் தெறிப்பதனால் சிவ்லீம் துரப்பிடித்தலுக்குள்ளாகியிருந்தது. சிவ்லீமின் 04 இடங்களில் நீர் கணிசமான அளவில் படுகின்றமை கணக்காய்வு களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதனைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கட்டிடத்தின் பொறியியலாளர் மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்க கூட்ட மண்டபத்தின் கதவு மற்றும் யன்னல்கள் நிர்மாணிக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவைகள் மதிப்பீட்டு மாதிரிகளின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டதாக சான்றுப்படுத்தி ரூபா 1,842,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அளவிடைப் பத்திரத்தின் படி விடயத்தின் இலக்கம் | பொறியியலாளர் மாதிரியின் படி செயற்பாடு மாதிரி | பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| எம் - 2 | தடிப்பமான கண்ணாடி இட்டு காற்று இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் கதவு | வெளிச்ச இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் கதவு | 50,490 |
| எம் - 8 எம் - 11 | தடிப்பமான கண்ணாடி இட்டு காற்று இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் யன்னல் | வெளிச்ச இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் யன்னல் | 1,349,000 |

| | | | |
|---|---|---|---|
| எம் - 13 எம் -14 | தடிப்பமான கண்ணாடி இட்டு காற்று இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் கதவு | வெளிச்ச இடைவெளியுடன் அலுமினியத்துடனான கண்ணாடிக் யன்னல் | 443,190 |
| | | | --------------------- |
| | | | 1,842,680 |
| | | | ======= |

(ஈ) கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட 105 கண்ணாடி யன்னல்களுக்கான பொறியியல் மதிப்பீட்டின் படி Grill மேவுகைக்காக 140 சதுர மீற்றருக்கு ரூபா 630,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மேவுகை இடப்படாதிருந்ததுடன் அது சபையின் பாதுகாப்புக்கு பிரச்சினையாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்க மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்த அதிகாரச்சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 30,065,945 இற்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரி (CIGFL) ஆன ரூபா 75,165 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| இரண்டாம் நிலை | 19 | 05 | 14 |

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை | 12 | 06 | 06 |
| | ---------- | ----------- | ---------- |
| மொத்தம் | 33 | 13 | 20 |
| | ===== | === | ==== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியர் பதவிக்காக தகுதியான நபரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரீட்சகர், சாரதி, இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு